**நீதித்துறை நடுவர், (விரைவு நீதிமன்றம்), ஓசூர், கிருஷ்ணகிரி மாவட்டம்.**

**முன்னிலை: திருமதி. V. பார்கவி, B.A., B.L., L.L.M.**

**நீதித்துறை நடுவர், (விரைவு நீதிமன்றம்), ஓசூர்.**

**2026 - ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 21-ம் நாள் செவ்வாய்கிழமை**

**ஆண்டு பட்டிகை வழக்கு எண்: 257/2016**

**தீர்ப்பு நாள் :21.04.2026**

**CNR NO:TNKI10-000168-2016**

**அரசுக்காக:-**

காவல் உதவி ஆய்வாளர்,

மத்திகிரி காவல் நிலையம்,

குற்ற எண் - 258/2008. ... குற்றமுறையீட்டாளர்

/எதிராக/

நாராயணசாமி (வயது - 26/2008),

த/பெ. சுப்பையா (எ) சோமப்பா,

நேதாஜி நகர்,

மத்திகிரி.

(எதிரிகள், வயது மற்றும்

விலாசம் இறுதியறிக்கையின்படி .... எதிரி

**குற்றவியல் நடைமுறை விதி 106 ன் கீழான விவர பட்டியல்**

| | | குற்றஞ்சாட்டப்பட்டவரின் விவரம் | | | | |
|---|---|---|---|---|---|---|
| வரிசை எண் | பெயர் | தந்தை /கணவர் பெயர் | இனம் அல்லது சாதி | தொழில் | இருப்பிடம் | வயது |
| 1 | நாராயணசாமி | சுப்பையா (எ) சோமைய்யா | இந்து | கூலி | நேதாஜி நகர், மத்திகிரி | 26/2008 |

| நிகழ்வு | முறையீடு | கைது அல்லது முன்னிலை | பிணையின் பேரில் விடுதலை | விசாரணையின் தொடக்கம் | விசாரணையின் முடிவு | தண்டனை அல்லது ஆணை | தாமதத்திற்க்கான விளக்கம் |
|---|---|---|---|---|---|---|---|
| 11.10.2008 | 14.10.2008 | 15.10.2008 | 17.11.2008 | 10.02.2012 | 16.04.2026 | 21.04.2026 | -- |

**சென்னை உயர்நீதிமன்றத்தின் 07.04.2021-ம் தேதியிட்ட Roc.No.814/2020/RG/F1-ன் படியும் மற்றும் குற்றவியல் நடைமுறை விதிகள், 2019 ன் கீழ் விதி 106(4)ன் படி வழக்கின் சுருக்கம்**

| | | |
|---|---|---|
| 1. | எதிரிகள் நீதிமன்ற காவலுக்கு அனுப்பப்பட்ட நாள் | 15.10.2008 |
| 2. | இறுதியறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | 19.01.2009 |
| 3. | முதன்மை பதிவேட்டு வழக்கு மேல் விசாரணைக்கு அனுப்பப்பட்ட நாள் | --- |
| 4. | எதிரியிடம் கு.வி.மு.ச. 240 பிரிவின் கீழ் வினவிய நாள் | 01.02.2010 |
| 5. | இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பல்வகை மனுவின் | |

| | | | | |
|---|---|---|---|---|
| | விவரம் | | | |
| | குற்றப்பல்வகை மனு எண். | உத்தரவு அனுமதிக்கப்பட்டது /தள்ளுபடி செய்யப்பட்டது | மேல்முறையீட்டு வழக்கு விவரம் | |
| | Crl.M.P.No.7674/08, dt: 10.11.2008, U/s.437 Cr.P.C. | தள்ளுபடி செய்யப்பட்டது | இல்லை | |
| | Crl.M.P.No.8026/08, dt: 17.11.2008, U/s.437 Cr.P.C. | அனுமதிக்கப்பட்டது | இல்லை | |
| | Crl.M.P.No.9202/08, dt: 06.11.2009, U/s.439 Cr.P.C. | அனுமதிக்கப்பட்டது | இல்லை | |
| | Crl.M.P.No.8619/08, dt: 29.11.2008, U/s.451 Cr.P.C. | அனுமதிக்கப்பட்டது | இல்லை | |
| | சாட்சிகள் விசாரித்த நாட்களின் விவரம் | | | |
| | சாட்சிகள் | முதல் விசாரணை நாள் | குறுக்கு விசாரணை நாள் | |
| | திரு.நாகேந்திரன் | 10.02.2012 | 10.02.2012 | அ.சா.1 |
| | திரு.சுவாமி சாஸ்தா | 10.02.2012 | 10.02.2012 | அ.சா.2 |
| | திரு. சங்கர் நாராயணன் | 10.02.2012 | 10.02.2012 | அ.சா.3 |
| | திரு.வெங்கடேஷ் | 13.02.2013 | 13.02.2013 | அ.சா.4 |
| | திரு.அப்துல் நாசர் | 04.09.2013 | 04.09.2013 | அ.சா.5 |
| | திரு.உமர் | 09.04.2026 | 09.04.2026 | அ.சா.6 |
| | திரு.சிவஞானம் | 16.04.2026 | 16.04.2026 | அ.சா.7 |

| | | |
|---|---|---|
| 7. | எதிரியிடம் கு.வி.மு.ச. 313 (1) (ஆ) பிரிவின் கீழ் வினவப்பட்ட நாள் | 18.04.2026 |
| 8. | எதிரிகள் தலைமறைவு ஆகிய நாட்கள் மற்றும் நீதிமன்றத்தில் ஆஜராகிய /ஆஜர்படுத்தப்பட்ட நாட்கள் | --- |
| 9. | மாண்புமிகு மேலமை நீதிமன்றத்தின் உத்தரவு படி வழக்கு விசாரணை நிறுத்தி வைக்கப்பட்டிருந்தால் அதன் விவரம் மற்றும் தீர்வு | --- |

இவ்வழக்கு நீதித்துறை நடுவர் எண் - 2, ஒசூர் நீதிமன்றத்தினால் CC No:7/2009 என்ற எண்ணில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு அதன் பின்னிட்டு இவ்வழக்கானது இந்நீதிமன்றத்திற்கு [நீதித்துறை நடுவர், (விரைவு நீதிமன்றம்), ஒசூர்] விசாரணைக்காக மாற்றலாகியுள்ள காரணத்தினால், இந்நீதிமன்றத்தினால் CC No:257/2016 என்ற ஆண்டு பட்டிகை வழக்கு எண் வழங்கப்பட்டு விசாரணையானது தொடர்ந்து நடைபெற்று வந்துள்ளது. இவ்வழக்கில், அரசு தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.V.கனிமொழி அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.A.சத்தியநாராயணன் அவர்கள் ஆஜராகியும், இறுதியாக இவ்வழக்கு கடந்த 18.04.2026 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்கு எடுக்கப்பட்டு ஆவணங்களை நன்கு பரிசீலித்தும், இருதரப்பையும் கேட்டும் இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் கவனமான பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் ...

**தீர்ப்புரை**

இவ்வழக்கானது மத்திகிரி காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் எதிரிக்கு எதிராக இந்திய தண்டனைச்சட்டம் பிரிவு 381 ன் கீழ் குற்ற எண்.258/2008 என்ற எண்ணில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையின் பேரில் தொடரப்பட்டதாகும்.

**2) இறுதியறிக்கையில் கண்டுள்ள குற்றச்சாட்டின் சுருக்கம்:**

கடந்த 11.10.2008 -ம் தேதி இரவு 20.30 மணிக்கு மத்திகிரி காவல் நிலைய சரக சுந்தரம் பாஸ்ட்னர்ஸ் லிமிடெட் கம்பெனியில் ஒப்பந்த அடிப்படையில் 6 வருடகாலமாக பணிபுரிந்த KA 05 AD 0011 வண்டியின் டிரைவர் மேற்படி கம்பெனியின் ரூ.3500/- மதிப்புள்ள ஸ்கிராப்பை (இரும்பு) மார்ஜினில் கண்ட எதிரி நாராயணசாமி தனது சொந்த லாபத்திற்காக களவாடி விற்றதாக குறிப்பிட்டு எதிரிக்கு எதிராக இதச பிரிவு 381 -ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக இறுதியறிக்கையானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த இறுதியறிக்கை மற்றும் அதனுடன் இணைக்கப்பட்டிருந்த ஆவணங்களை பரிசீலனை செய்து வழக்கானது கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. மேற்படி

அழைப்பாணையை பெற்று எதிரிகள் ஆஜராகியிருந்த தேதியன்று வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.விமு.ச. பிரிவு 207-ன் கீழ் எவ்வித காலதாமதமுமின்றி இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

4) அரசு தரப்பில் தாக்கல் செய்திருந்த இறுதியறிக்கை மற்றும் அதனுடன் இணைக்கப்பட்டிருந்த ஆவணங்களை பரிசீலனை செய்து எதிரிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த இறுதியறிக்கை மற்றும் குற்றத்தின் சாராம்சங்களை கு.வி.மு.ச பிரிவு 240 -ன் கீழ் எதிரி மீது இ.த.ச. பிரிவு 381 -ன் கீழ் குற்றசாட்டு விளக்கி கூறி வினவியபோது, எதிரியானவர் தனக்கு எதிரான குற்றச்சாட்டை மறுத்துரைத்து வழக்கினை விசாரணை செய்திட வேண்டுமென கோரியதன் அடிப்படையில் இவ்வழக்கானது விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

5) இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சிகளாக அ.சா.1 முதல் அ.சா.7 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு மேற்படி சாட்சிகளின் மூலமாக அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**<u>6) அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்</u>**

கடந்த 11.10.2008 -ம் தேதி இரவு 20.30 மணிக்கு மத்திகிரி காவல் நிலைய சரக சுந்தரம் பாஸ்ட்னர்ஸ் லிமிடெட் கம்பெனியில் ஒப்பந்த அடிப்படையில் 6 வருடகாலமாக பணிபுரிந்த KA 05 AD 0011 வண்டியின் டிரைவர் மேற்படி

கம்பெனியின் ரூ.3500/- மதிப்புள்ள ஸ்கிராப்பை (இரும்பு) மார்ஜினில் கண்ட எதிரி நாராயணசாமி தனது சொந்த லாபத்திற்காக களவாடி விற்றதாக குறிப்பிட்டு எதிரிக்கு எதிராக இதச பிரிவு 381 -ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றத்திற்குரிய இறுதியறிக்கையானது தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டு அரசு தரப்பில் சாட்சியங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

7.1) அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களிலிருந்து தெரிய வரும் அரசு வழக்கின் சுருக்கம் என்னவென்றால், **அ.சா.1 திரு.நாகேந்திரன்** என்பவர் இவ்வழக்கின் வாதி எனவும், இவர் தனது Company ல் Executive section ல் பணிபுரியும் சாட்சி சுவாமி சாஸ்தா என்பவர் தன்னிடம் product களை Sub Contractor யிலிருந்து Collection செய்ததில் 7 tray மட்டும் ஒப்படைத்தும் மீதி 15 tray's மற்றும் பாலிதீன் கவரில் collection செய்த product ஐ திருடி விற்றுள்ளதாக சொன்ன தகவலின் படி விசாரித்து பற்றியும், காவல் நிலையம் ஆஜராகி புகார் கொடுத்தது பற்றியும், அந்த புகார் மனு **அ.த.சா.ஆ.1 எனவும்**, KA 05 AD 0011 டெம்போ 407 **சா.பொ.1** எனவும், **அ.சா.2 திரு.சுவாமி சாஸ்தா** என்பவர் Executive section ல் Executive Officer ஆக பணிபுரிந்ததாகவும், 11.10.2008 ம் தேதி 20.30 மணிக்கு KA 05 AD 0011 என்ற Tempo 407 ன் டிரைவர் நாராயணசாமி என்பவர் தன் company – sub contractor யிடம் இருந்து collection செய்த product களில் 7 tray யை மட்டும் ஒப்படைத்தும் மீதி 15 tray மற்றும் 2 பாலிதீன் கவரில் collection செய்த product களை

திருடி விற்று உள்ளதை சாட்சி 1 நாகேந்திரனிடம் தகவல் சொன்னது பற்றியும், **அ.சா.3 திரு.சங்கர் நாராயணன்** என்பவர் பார்வை மகஜர் சாட்சி எனவும், போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டதையும், மாதிரி வரைபடம், மகஜர் தயார் செய்ததையும் அதில் கையொப்பம் செய்தது பற்றியும், மேலும் பார்வை மகஜரிலுள்ள அ.சா.3 ன் கையொப்பம் **அ.த.சா.ஆ.2 எனவும்**, சாட்சியம் அளித்து ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

7.2) மேலும் **அ.சா.4 திரு.வெங்கடேஷ்** என்பவர் வழக்கில் சம்மந்தப்பட்ட லாரியை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றும் போது உடனிருந்தது பற்றியும், மேலும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 2 வது சாட்சி கையொப்பம் **அ.த.சா.ஆ.3 எனவும், அ.சா.5 திரு.அப்துல் நாசர்** என்பவர் ஒப்பந்த அடிப்படையில் MAF டிரான்ஸ்போர்ட் பணியில் சில டிரைவர்களை வைத்து பணிபுரிவதாகவும், அப்படி பணிபுரியும் போது KA 05 AD 0011 என்ற வண்டியின் டிரைவர் தன் collection செய்த பொருட்களை திருடி விற்றதாக கேள்விப்பட்டு அ.சா.1 க்கு தகவல் சொன்னது பற்றியும், **அ.சா.6 திரு.உமர்** என்பவர் வழக்கில் சம்மந்தப்பட்ட லாரியை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றும் போது உடனிருந்தது பற்றியும், மேலும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் **அ.த.சா.ஆ.4 எனவும்,** இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி திருமதி.விஜயா, காவல் உதவி ஆய்வாளர் இறந்துவிட்டதால் அவர்களுக்கு பதிலாக மத்திகிரி சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் **திரு.சிவஞானம் வழக்கு கோப்பின்**

**அடிப்படையில் அ.சா.7 ஆக** சாட்சியம் அளித்துள்ளதாகவும், மேற்படி முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.5 எனவும்**, மாதிரி வரைபடம் **அ.த.சா.ஆ.6 எனவும்**, மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ.7 எனவும்**, கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.8 மற்றும் 9 எனவும்**, மேலும் படிவம் 91 **அ.த.சா.ஆ.10 எனவும்** சாட்சியம் அளித்து ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

8) அரசு தரப்பில் முன்வைக்கப்பட்டிருந்த சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமாக அமைந்துள்ள சூழ்நிலைகள் குறித்து எதிரியிடம் குவி.மு.ச. பிரிவு 313 (1) (b)-ன் கீழ் எடுத்துரைத்து வினவியபொழுது எதிரி அரசு தரப்பில் பொய் சாட்சியங்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும், அரசு தரப்பில் பொய் சாட்சி, பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், எதிரி தரப்பில் விசாரணை செய்ய சாட்சிகள் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிரி தரப்பில் எந்த சாட்சியும் விசாரணை செய்யப்பட்டு சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

9) இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் சீராய்ந்து பரிசீலனை செய்யப்பட்டன.

10) அரசு தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர், வழக்கை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்திருப்பதாகவும், எனவே எதிரிகளுக்கு உரிய தண்டனை வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

11) எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர், வழக்கில் திருடு போன பொருட்களின் உரிமையாளர் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றும், மகஜர் சாட்சி பிறழ் சாட்சியாக சாட்சியம் அளித்திருப்பதாகவும், வழக்கு சொத்துக்களை சரியாக அடையாளம் காட்டவில்லை என்றும், அரசு தரப்பில் வழக்கை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாகவும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை விடுதலை செய்ய வேண்டுமென்று கூறி வாதிட்டார்.

**12) இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், எதிரிக்கு எதிராக இ.த.ச பிரிவு 381 -ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பினால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.**

**13) எதிரிக்கு எதிரான இ.த.ச பிரிவு 381 -ன் கீழான குற்றச்சாட்டு குறித்த விவாதம்**

a) கடந்த 11.10.2008 -ம் தேதி இரவு 20.30 மணிக்கு மத்திகிரி காவல் நிலைய சரக சுந்தரம் பாஸ்ட்னர்ஸ் லிமிடெட் கம்பெனியில் ஒப்பந்த அடிப்படையில் 6 வருடகாலமாக பணிபுரிந்த KA 05 AD 0011 வண்டியின் டிரைவர் மேற்படி கம்பெனியின் ரூ.3500/- மதிப்புள்ள ஸ்கிராப்பை (இரும்பு) களவாடி விற்றதாக குறிப்பிட்டு அரசு தரப்பில் முன்வைக்கப்பட்டுள்ள சாட்சியங்களுக்கு எதிரி தரப்பில் எவ்விதமான மறுப்புரையும், சாட்சியங்களின் வாயிலாகவோ அல்லது

சான்றாவணங்கள் வாயிலாகவோ தெரிவிக்கப்படவில்லை. எனவே கடந்த 11.10.2008 -ம் தேதி இரவு 20.30 மணிக்கு மத்திகிரி காவல் நிலைய சரக சுந்தரம் பாஸ்ட்னர்ஸ் லிமிடெட் கம்பெனியில் ஒப்பந்த அடிப்படையில் 6 வருடகாலமாக பணிபுரிந்த KA 05 AD 0011 வண்டியின் டிரைவர் மேற்படி கம்பெனியின் ரூ.3500/- மதிப்புள்ள ஸ்கிராப்பை (இரும்பு) களவாடி விற்றதாக குறிப்பிட்டு அரசு தரப்பில் சொல்லிய சங்கதிகள் உரிய வகையில் சந்தேகத்திற்கு இடமளிக்காமல் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

b) **இருப்பினும் இவ்வழக்கில் சொல்லப்பட்டுள்ள சுந்தரம் பாஸ்ட்னர்ஸ் நிறுவனத்திற்கு சொந்தமான ரூ.3500/- மதிப்புள்ள பொருட்களை (இரும்பு) இவ்வழக்கின் எதிரி தான் களவாடி சென்று விற்றுள்ளாரா என்பது குறித்து சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களுடன் ஒன்றிணைத்து சீராய வேண்டியது அவசியமாகும்.**

c) இவ்வழக்கினை அரசு தரப்பில் நிரூபணம் செய்யும் பொருட்டு கடந்த 11.10.2008 -ம் தேதி இரவு 20.30 மணிக்கு மத்திகிரி காவல் நிலைய சரக சுந்தரம் பாஸ்ட்னர்ஸ் லிமிடெட் கம்பெனியில் ஒப்பந்த அடிப்படையில் 6 வருடகாலமாக பணிபுரிந்த KA 05 AD 0011 வண்டியின் டிரைவர் மேற்படி கம்பெனியின் ரூ.3500/- மதிப்புள்ள ஸ்கிராப்பை (இரும்பு) களவாடி விற்றதாக சொல்லப்படும் சம்பவத்தை நேரடியாக பார்த்ததாக கண்ணுற்ற சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. மேலும்

புகார்தாரரின் நிறுவனமான பாஸ்ட்னர்ஸ் நிறுவனத்திற்கு சொந்தமான பொருட்களை எதிரி தான் திருடி சென்று விற்றார் என்று ஆஜர் எதிரியை அடையாளம் காட்டி எந்தவொரு தனிநபர் சாட்சியும் சாட்சியம் அளிக்கவில்லை.

d) மேற்படி அ.சா.1 தனது புகாரில் MAF Transport ல் 6 வருடங்கள் ஓட்டுநராக பணிபுரிந்து வரும் எதிரி TATA 407 Tempo ல் collection மற்றும் delivery வேலை செய்து வரும் நிலையில் கடந்த 11.10.2008 ம் தேதி இரவு 8.30 மணிக்கு MAF Transport Sub contractor யிடமிருந்து collection செய்த Product களை 7 tray மட்டும் நிறுவனத்தில் ஒப்படைத்துவிட்டு மீதமுள்ள 15 tray மற்றும் 2 பாலிதீன் கவர் Product களை திருடி எங்கேயோ விற்றுள்ளதாக கூறியுள்ளார். மேற்படி புகார்தாரர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அவர் தனது சாட்சியத்தில், "**எதிரியை தெரியும், அவர் MAF Transport நிறுவனத்தில் ஓட்டுநராக பணிபுரிந்து வந்தார், MAF Transport எங்கள் நிறுவனத்தின் பொருட்களை எடுத்து செல்வதற்காக Sub Contractor வேலை செய்து வந்தார்கள், 11.10.2008 ம் தேதி எதிரி நாரயாணசாமி MAF Transport க்கு சொந்தமான TATA 407 Tempo KA 05 AD 0011 வண்டியில் Universal Engineering Company ல் இருந்து மோட்டார் உதிரி பாகங்கள் 8 tray களை கொண்டு வந்து இறக்கினார், ஆனால் பொருட்கள் ஏற்றிய இடத்தில் 22 பெட்டிகள் ஏற்றப்பட்டிருந்தது என்பதற்கு ரசீது கொண்டு வந்திருந்தார், சாட்சி மீண்டும் 7 பெட்டிகள் தான் இறக்கினார் என்று கூறுகிறார், அதனால்**

**எங்கள் கம்பெனிக்கு சுமார் ரூ.3500/- இழப்பு ஏற்பட்டது** " என்று சாட்சியம் அளித்துள்ளார்.

e) மீண்டும் அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில், "**MAF Transport நிறுவனம் எங்கள் நிறுவனத்தில் ஒப்பந்த தாராக இருக்கிறார்கள் என்று காட்டுவதற்கான ஆவணம் புகார் கொடுக்கும் போது போலிசாரிடம் நான் தரவில்லை, MAF Transport நிறுவனத்திற்கும், எங்கள் நிறுவனத்திற்கும் என்ன பொருட்கள் பரிமாற்றம் என்று எனக்கு தெரியாது, Delivery challan நகல் ஏதும் கொடுத்தாரா என்று தெரியாது, Delivery challan ல் எதிரி கையொப்பம் செய்துள்ளாரா என்று எனக்கு நியாபகம் இல்லை, 11.10.2008 ம் தேதி நடைபெற்ற சம்பவத்திற்கு 14.10.2008 ம் தேதி புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், Universal Engineering நிறுவனம் நாங்கள் புகார் கொடுக்கும் வரை புகார் எதுவும் பெறவில்லை என்றால் சரிதான், காவல் நிலையத்தில் புகார் கொடுத்த போது Universal Engineering நிறுவனத்தை போலிசார் அழைக்கவில்லை, காணாமல் போன பொருட்கள் எங்கள் நிறுவனத்திற்கு சொந்தமானது என்று காட்டுவதற்கான ஆவணம் எதுவும் போலிசார் வசம் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல, பொருட்கள் குறைவாக இருப்பதை நான் நேரடியாக பார்க்கவில்லை**" என்று சாட்சியம் அளித்துள்ளார்.

f) மேற்படி அ.சா.1 ன் சாட்சியத்தையும், வழக்கு ஆவணங்களையும் பரிசீலனை செய்த போது வழக்கில் எதிரி திருடி விற்றதாக சொல்லும் பொருட்கள் புகார்தாரர் நிறுவனமான பாஸ்ட்னர்ஸ் நிறுவனத்திற்கு சொந்தமானது என்பதை காட்டுவதற்கான ஆவணம் எதுவும் வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை. மேலும் எதிரி திருடி விற்றதாக சொல்லும் பொருட்கள் Universal Engineering நிறுவனத்திலிருந்து எதிரியால் எடுத்து வரப்பட்ட பொருட்கள் என்பதற்கு ஆவணம் எதுவும் வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை. மேற்படி அ.சா.1 தனது சாட்சியத்தில் எதிரி கொண்டு வந்த ரசீதில் 22 Tray கள் இருந்ததாகவும், ஆனால் எதிரி 7 tray க்களை மட்டுமே கொண்டு வந்தார் என்றும் சொல்லியுள்ள நிலையில் அந்த ரசீதை வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்யாதது குறித்து அரசு தரப்பில் எந்த விளக்கமும் அளிக்கப்படவில்லை. மேலும் 11.10.2008 ல் சம்பவம் நடைபெற்று ஆஜர் எதிரி தான் திருடி விற்றுள்ளார் என்பது தெரிந்தும் 3 நாள்கள் கழித்து 14.10.2008 ல் காலதாமதமாக புகார் கொடுத்ததற்கான காரணம் எதுவும் குறிப்பிடவில்லை.

g) மேலும் சுந்தரம் பார்ஸ்னர்ஸ் நிறுவனத்தில் ஜூனியர் Executive ஆக வேலை செய்து வந்த சுவாமி சாஸ்தா அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு அவர் தனது சாட்சியத்தில், **"எதிரி எங்கள் கம்பெனியுடன் contractor வேலை செய்து வரும் MAF Transport ல் டிரைவர் ஆக வேலை செய்து வந்தார் என்றும், எங்கள் கம்பெனிக்கு தேவையான உதிரி பாகங்கள் கம்பெனிக்கு வெளியே தயார்**

**செய்யப்பட்டு அவற்றை MAF Transport மூலம் எங்கள் கம்பெனிக்கு கொண்டு வந்து சேர்ப்பது வழக்கம் என்றும், 11.10.2008 ம் தேதி காலை KA 05 AD 0011 பதிவெண் கொண்ட வாகனத்தை கம்பெனியில் இருந்த எடுத்து கொண்டு எங்கள் கம்பெனிக்கு தேவையான உதிரி பாகங்களை அன்று இரவு சுமார் 8.30 மணிக்கு எங்கள் கம்பெனிக்கு வந்தார், எதிரி ஒப்படைத்த Delivery challan ல் 22 பெட்டிகள், 2 பாலிதீன் பைகளில் உதிரி பாகங்கள் வந்திருக்க வேண்டும், ஆனால் எதிரி வண்டியிலிருந்து 7 பெட்டிகள் மட்டும் இறக்கினார், சுமார் 200 கிலோ எடையுள்ள ரூ.2300/- மதிப்புள்ள உதிரி பாகங்கள் எதிரியால் கம்பெனிக்கு கொண்டு வரப்படவில்லை** " என்று சாட்சியம் அளித்துள்ளார்.

h) மேலும் அ.சா.2 தனது குறுக்கு விசாரணையில் "**எதிரி வண்டியில் எத்தனை பொருட்கள் ஏற்றப்பட்டது என்று நேரடியாக தெரியாது, எதிரியின் வாகனத்தில் பொருட்கள் ஏற்றியவர்கள் யார் என்று எனக்கு தெரியாது, காணாமல் போன பொருட்கள் பற்றி போலிசார் கேட்கவில்லை, எதிரியுடன் வேறு யார் வந்தார்கள் என்று தெரியாது, பொருட்கள் காணாமல் போய் இருப்பதாக அங்கு வேலை செய்யும் நபர்கள் கூறினார்கள்**" என்று சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி அ.சா.2 முதலில் பொருட்கள் குறைவாக இருப்பதை தான் நேரில் பார்த்ததாகவும், பின்னர் வேலை செய்த கொண்டிருந்த நபர்கள் கூறியதாகவும் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும் எதிரி வண்டியில்

எத்தனை பொருட்கள் ஏற்றப்பட்டது என்று நேரடியாக தெரியாது என்று அ.சா.2 சாட்சியம் அளித்துள்ள நிலையிலும், எதிரி 22 பெட்டிகள் மற்றும் 2 பாலிதீன் பைகளில் பொருட்களை ஏற்றி வந்ததாக ரசீது எதுவும் தாக்கல் செய்யாத நிலையிலும் அரசு தரப்பில் சொல்லப்பட்டவாறு சம்பவம் நடந்ததா என்பது குறித்து சந்தேகம் ஏற்படும் வகையில் இருப்பதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் அ.சா.1 ரூ.3,500/- மதிப்புள்ள பொருட்களை திருடி விற்றதாக புகாரிலும், சாட்சியத்திலும் சொல்லியுள்ள நிலையில் ரூ.3500/- மதிப்புள்ள உதிரிபாகங்கள் எதிரியால் கொண்டுவரப்படவில்லை என்று அ.சா.2 முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார்.

i) மேலும் பார்வை மகஜர் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.3 தனது சாட்சியத்தில், **"எங்கள் நிறுவனத்தில் திருடு எதுவும் போகவில்லை, எங்கள் நிறுவனத்திற்கு வந்த பொருட்கள் குறைவாக உள்ளது, வரைபடத்தில் சம்பவ இடமாக பழைய இரும்பு பொருட்கள் வைக்கும் இடத்தை காண்பித்தார்கள், அந்த இடத்தில் என்ன இடங்கள் காட்டப்பட்டுள்ளது என்று தெரியாது, நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று தெரியாது"** என்று சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி இவ்வழக்கில் காணாமல் போன பொருட்கள் ஆனது நிறுவனத்திற்கு வெளியே நடைபெற்றது என்றால் சரிதான் என்று அ.சா.1 சாட்சியம் அளித்துள்ள நிலையில் சம்பவ இடத்தை நிறுவனத்திற்குள் இருக்கும் பழைய இரும்பு பொருட்கள் வைக்கும் இடத்தை மாதிரி வரைபடத்தில்

காட்டியுள்ளார்கள் என்று முரண்பட்ட வகையில் அ.சா.2 சாட்சியம் அளித்திருப்பதும் பார்வை மகஜர் ஆவணத்தில் சம்பவ இடம் நிறுனத்திற்குள் காட்டப்பட்டிருப்பதாகவும், அரசு தரப்பில் வழக்கில் சரியாக புலன்விசாரணை மேற்கொள்ளப்படவில்லை என்பதை காட்டுவதாக இருப்பதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

j) மேலும் கைப்பற்றுதல் மகஜரில் சாட்சி கையொப்பம் செய்த அ.சா.4 தனது சாட்சியத்தில் "**காவல் நிலையம் சென்ற போது போலிசார் கையெழுத்து கேட்டார்கள், நான் கையெழுத்து போட்டேன், என்ன வழக்கு என்று தெரியாது, போலிசார் என்னை விசாரிக்கவில்லை**" என்று அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்ட வகையில் சாட்சியம் அளித்து பிறழ் சாட்சியாக கருதப்பட்டுள்ளார்.

k) மேலும் MAF Transport நிறுவனத்தின் உரிமையாளர் அப்துல் நாசர் அ.சா.5 ஆக விசாரிக்கப்பட்டு அவர் தனது சாட்சியத்தில், "**வழக்கு சம்மந்தமாக போலிசார் விசாரிக்கவில்லை என்றும், சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றும், என்னிடம் ஆவணங்கள் எதுவும் காட்டவில்லை என்றும், என்ன பொருட்கள் கைப்பற்றப்பட்டது, எதிரி எவ்வாறு காவல் நிலையத்திற்கு வந்தார் என்று தெரியாது"** என்று சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி அ.சா.5 எதிரி "**எவ்வாறு காவல் நிலையத்திற்கு வந்தார் என்று தெரியாது**" என்று சாட்சியம் அளித்திருப்பதற்கு முரண்பட்ட வகையில் அ.சா.2 தனது சாட்சியத்தில் MAF Transport நிறுவனத்தால் எதிரி அழைக்கப்பட்டு காவல் நிலையம் அழைத்து

சென்றோம் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

l) மேலும் கைப்பற்றுதல் மகஜரில் மற்றொரு சாட்சியாக கையொப்பம் செய்த அ.சா.6 தனது சாட்சியத்தில், "**எதிரி நாராயணசாமி திருடிய பொருட்களை போலிசார் கெலமங்கலம் சாலையில் உள்ள ஸ்கிராப் கடையில் வைத்து என் முன்னிலையில் கைப்பற்றினார்கள் என்றும், என்னுடன் வெங்கடேஷ் என்பவர் சாட்சியாக கையொப்பம் செய்தார்**" என்று அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்ட வகையில் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி அ.சா.6 ன் சாட்சியத்தையும், வழக்கு ஆவணங்களையும் பரிசீலனை செய்த போது கைப்பற்றுதல் மகஜரில் எதிரியிடமிருந்து வாகனத்தை கைப்பற்றும் போது தான் அ.சா.6 சாட்சி கையொப்பம் செய்துள்ள நிலையில் ஸ்கிராப் கடையில் வைத்து திருடிய பொருட்களை தன் முன்னிலையில் கைப்பற்றியதாக அ.சா.6 முரண்பட்ட வகையில் சாட்சியம் அளித்திருப்பது அரசு தரப்பில் வழக்கை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் வழக்கில் திருடி விற்றதாக சொல்லும் உதிரிபாகங்கள் அடையாளம் காட்டப்பட்டு அவை எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக அரசு தரப்பில் வழக்கை நிரூபிக்க தவறிவிட்டதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

m) மேலும் இவ்வழக்கில் எதிரியிடமிருந்து வாகனத்தை மகஜரில் கைப்பற்றியதாகவும், அந்த மகஜரில் கையொப்பம் செய்த சாட்சிகள் நீதிமன்றத்தில்

ஆஜராகி அரசு தரப்பு வழக்கை நிரூபணம் செய்யும் வகையில் சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. மேலும் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி இறந்துவிட்டதால் அவருக்கு பதிலாக ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ள அ.சா.7 தனது சாட்சியத்தில் "**நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான், இந்த வழக்கின் புகார்தாரர் சுந்தரம் பாஸ்ட்னர்ஸ் நிறுவனத்தில் Personal Manager ஆக வேலை செய்து வந்தார் என்றால் சரிதான், புகார்தாரர் நிறுவனத்தின் உரிமையாளரையும் திருடு போன பொருட்களின் நிறுவனத்தின் உரிமையாளரையும் விசாரிக்கவில்லை என்றாலும், உரிமையாளரிடமிருந்து எந்தவிதமான Authorization பெற்று இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரிதான்**" என்று சாட்சியம் அளித்துள்ளார்.

n) மேற்படி வழக்கில் திருடு போனதாக சொல்லும் பொருட்கள் சுந்தரம் பாஸ்ட்னர்ஸ் நிறுவனத்திற்கு சொந்தமானது என்பதற்கும், Universal Engineering நிறுவனத்திலிருந்து எதிரி என்னென்ன பொருட்களை ஏற்றி வந்தார் என்பதற்கும், என்ன விதமான பொருட்கள் எவ்வளவு எடையுள்ள பொருட்கள் காணாமல் போனது என்பதற்கும், ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. இந்நிலையில் அரசு தரப்பில் வழக்கில் சரியாக புலன் விசாரணை மேற்கொள்ளப்படவில்லை என்றும், வழக்கை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாகவும் இந்நீதிமன்றம்

கருதுகிறது. வழக்கில் திருடப்பட்டதாக சொல்லும் பொருட்களை எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள் அரசு தரப்பு வழக்கை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யும் வகையில் சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை.

o) மேலும் அ.த.சா.ஆ.1 புகார் மனுவினை ஒத்துரைக்கும் வகையில் எந்தொரு தனிநபர் சாட்சியும் சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் இவ்வழக்கில் பார்வை மகஜர், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் சாட்சிகள் நீதிமன்றத்தில் ஆஜராகி ஆஜர் எதிரியை அடையாளம் காட்டி அரசு தரப்பு வழக்கை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கும் வகையில் சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. இந்நிலையில் அரசு தரப்பில் சொல்லப்பட்டவாறு சம்பவம் நடந்ததா என்று சந்தேகம் ஏற்படுத்தும் வகையில் இருப்பதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. இவ்வாறாக அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களுக்கு இடையே உள்ள முரண்பாடுகளுக்கு எவ்விதமான விளக்கங்களும், காரணங்களும் அரசு தரப்பில் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் அளிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

p) மேலே விவரிக்கப்பட்டுள்ளவாறு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களுக்கு இடையே உள்ள முரண்பாடுகள், இரும்பு பொருட்கள் களவாடி சென்று விற்றதாக சொல்லப்படும் விதம், எதிரியை அடையாளம்

காட்டப்படாமை, சாட்சிகளின் நம்பகத்தன்மை மற்றும் இவ்வழக்கில் புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்ட விதம் ஆகியவை குறித்து அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமளிக்காத வகையில் ஏற்கத்தக்க உரிய விளக்கங்கள் மற்றும் காரணங்கள் ஏதும் அளிக்கப்படாததால் அரசு தரப்பானது எதிரிகளுக்கு எதிரான வழக்கினை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக,

(i) எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள இ.த.ச. பிரிவு 381-ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படாததால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளிப்பது நீதியின்பாற்பட்டது என்று இந்நீதிமன்றம் கருதுவதால் சந்தேகத்தின் பலனை இவ்வழக்கின் எதிரிக்கு அளித்து எதிரியை இவ்வழக்கின் குற்றவாளி இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 248(1)-ன் கீழ் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளித்து உத்தரவிடப்படுகிறது.

(ii) இவ்வழக்கில் C.P No. 200/2008 என்ற வழக்கு சொத்தான வாகனத்தை அதன் உரிமையாளர் ஏற்கனவே குற்றவியல் நீதித்துறை நடுவண்.2 நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுக்கொண்டு விட்டதால், வழக்கு சொத்தை பொறுத்து எவ்வித உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 21-ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டடது.

ஓம் - திருமதி. V. பார்கவி, B.A., B.L., L.L.M.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
ஒசூர்.

**அரசுத்தரப்பு சாட்சிகள்**:-

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு.நாகேந்திரன் | - | அ.சா.1 |
| 2 | திரு.சுவாமி சாஸ்தா | - | அ.சா.2 |
| 3 | திரு. சங்கர் நாராயணன் | - | அ.சா.3 |
| 4 | திரு.வெங்கடேஷ் | - | அ.சா.4 |
| 5 | திரு.அப்துல் நாசர் | - | அ.சா.5 |
| 6 | திரு.உமர் | - | அ.சா.6 |
| 7 | திரு.சிவஞானம் | - | அ.சா.7 |

**அரசுத்தரப்பு சான்றாவணங்கள்**:-

| | | | |
|---|---|---|---|
| 1 | புகார் மனு - அசல் | - | அ.த.சா.ஆ.1 |
| 2 | பார்வை மகஜரிலுள்ள அ.சா.3 ன் கையொப்பம் - | - | அ.த.சா.ஆ.2 |

| | | | |
|---|---|---|---|
| | அசல் | | |
| 3 | கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 2வது சாட்சி கையொப்பம் - அசல் | - | அ.த.சா.ஆ.3 |
| 4 | கைப்பற்றுதல் மகஜரிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் - அசல் | - | அ.த.சா.ஆ.4 |
| 5 | முதல் தகவல் அறிக்கை - அசல் | - | அ.த.சா.ஆ.5 |
| 6 | மாதிரி வரைபடம் - அசல் | - | அ.த.சா.ஆ.6 |
| 7 | ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி - அசல் | - | அ.த.சா.ஆ.7 |
| 8 | கைப்பற்றுதல் மகஜர் - அசல் | - | அ.த.சா.ஆ.8 |
| 9 | கைப்பற்றுதல் மகஜர் - அசல் | - | அ.த.சா.ஆ.9 |
| 10 | படிவம் -91 - அசல் | - | அ.த.சா.ஆ.10 |

**சான்று பொருள்: -** KA 05 AD 0011 டெம்போ 407 - சா.பொ.1

**எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:** இல்லை.

ஒம் - திருமதி. V. பார்கவி, B.A., B.L., L.L.M.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம்,
ஒசூர்.

**பின்குறிப்பு:-**

1) வழக்கு விசாரணையின் பொழுது எதிரி நீதிமன்ற பிணையிலிருந்தார்.

2) வழக்கு முடிவு சம்மந்தப்பட்ட காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

3) வழக்கு விசாரணையின்பொழுது எந்தவொரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நீதிமன்றத்தில் ஆஜராகி இருக்கவில்லை.